[1972 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, கரும்பு பற்றி ஒரு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். மத்திய சர்க்காரே 73-70 கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டுவிட்டு 85 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொல்லியனுப்புகிறார்கள். இப்படி உத்தரவு போடுவது ஒரு விலை, வாங்கிக்கொடுக்க வேண்டுமென்று சொல்லுவது ஒரு விலை என்ற நிலைமை இருக்கிறது. தமிழக அரசைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்கார் என்ன விலையை நிர்ணயிக்கிறார்களோ அதை வாங்கிக்கொடுப்பதற்கும், கூடுமானல் அதற்குமேலும் வாங்கிக்கொடுக்கவும் முயற்சிக்கத் தயாராக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருத்தங்கலில் சலவைத் துறை

* 203. **விஞ—திரு. கா. காளிமுத்து** : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாத்தூர் வட்டம், திருத்தங்கலில் சலவைத் துறை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : திருத்தங்கலில் சலவைத் துறை கட்ட ஊராக வளர்ச்சி இயக்குநரின் செயற்குறிப்பை ஆய்ந்து ரூ. 10,600 மான்யமாகவும், ரூ. 16,600 கடனாகவும் வழங்கியுள்ளது.

17–5–1972 அன்று சலவைத் துறை கட்ட ஒப்ப அறிவிப்பு செய்யப்பட்டும் ஒப்பந்தக்காரர் எவரும் முன்வராததால் மறு ஒப்ப அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது. இதற்கு கடைசி நாள் 24-7-72.

Kallar Reclamation Scheme.

* 204. Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have constituted any Special Department for Kallar Reclamation in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.